கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.72/2024**

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 26 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 6 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஸ் | வயது | 42 |
| தந்தை பெயர் | ஹரிதாஸ் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | வடபாதிமங்கலம் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பாக குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன அசோகன் எனது அண்ணன் ஆவார். கடந்த 27.12.2023 ம் தேதி திருவாரூரில் இருந்து திருத்துறைப்பூண்டி நோக்கி எனது அண்ணன் இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது திருத்துறைப்பூண்டியில் இருந்து திருவாரூர் நோக்கி வந்த Maxi cab van மோதி எனது அண்ணன் விபத்துக்குள்ளானார். திருவாசலை சேர்ந்த அறிவானந்தம் என்பவர் அசோகனின் மனைவிக்கு போன் மூலம் தகவல் சொல்லியுள்ளார். அசோகனின் மனைவி எனக்கு விபத்து குறித்து தகவல் சொன்னார். அதன்பிறகு நான் திருத்துறைப்பூண்டியில் இருந்து திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு வந்தேன். நான் வந்து பார்த்தபோது அசோகன் ஏற்கெனவே இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். போலீசார் அசோகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.03.26 16:41:17 +0530

**மறுவிசாரணை**

இல்லை.

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்.